ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1898/37 - 2015 ජනවාරි මස 21 වැනි බදාදා - 2015.01.21

*1898/37 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்**

**கிழக்கு மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புதல்**

கிழக்கு மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரொருவர் கேட்டு விலகியுள்ளதன் காரணமாக, அம்மாகாண சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65(1) ஆம் பிரிவின் கீழ் கிழக்கு மாகாணத்தின் மாகாண சபையின் செயலாளர் எனக்கு அறிவித்துள்ளாராதலாலும்;

அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கெனத் தகவுடைய ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 65(2) ஆம் பிரிவின் கீழ் என்னால் தேவைப்படுத்தப்பட்டுள்ளாராதலாலும்;

மேற்கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென உரிய காலக்கெடுவினுள் பெயர் குறித்து நியமிக்கவில்லையாதலாலும்;

தேர்தல்கள் ஆணையாளரான வடுகே வருணசிறி மஹிந்த தேசப்பிரிய ஆகிய நான், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65(2) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயலாற்றி, 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆம் திகதி கிழக்கு மாகாண சபைக்காக நடாத்தப்பட்ட தேர்தலின்போது தேர்ந்தெடுக்கப்பட்ட இறுதி உறுப்பினருக்கு அடுத்ததாக அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ள திரு. அலி ஷாகீர் மௌலானா செய்யட் என்பவர் அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதான மட்டக்களப்பு நிர்வாக மாவட்டத்திலிருந்து மேலேயுள்ள மாகாண சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய,<br>
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,<br>
இராஜகிரிய,<br>
2015, சனவரி 20.

02- 118



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.